


# Police Custody Officer – தகவல் தாள்

## VICTORIA POLICE தனது படைப்பிரிவில் பல்லின மக்களைச் சேர்த்துக்கொள்வதில் பற்றுறுதி கொண்டுள்ளதுடன், பொலிஸ் காவல் உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்பு இப்பொழுது இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

Police Custody Officer (PCO) உடைய பங்களிப்பானது காவலில் இருக்கும் ஆட்களின் நிர்வாகத்திலும், நலன்களிலும் ஒரு முக்கிய பங்கை நீங்கள் எடுக்கவேண்டிய ஒரு உற்சாகமான, சவாலாக அமைந்துள்ள அத்துடன் திருப்தியை அளிக்கக்கூடிய உத்தியோகமாகும்.

உறுதியான, வெவ்வேறு நேரங்களில் (shift) வேலைசெய்ய விரும்புவர்களுக்குப் PCO உத்தியோகம் பொருத்தமானதாகும். இது ஒரு சுறுசுறுப்பான வேலை என்பதுடன், தெரிவாகும் விண்ணப்பதாரிகள் உடல் உறுதி உடையவராகவும், இடம்விட்டு இடம் நகரக்கூடியவராகவும் இருக்கவேண்டும். முக்கியமாக PCO க்கள் தடுப்புக்காவலில் உள்ளவர்களுடன் வேலைசெய்ய வேண்டியவர்களாக இருப்பதால், முதிர்ச்சி, சமாளிக்கும்தன்மை அத்துடன் தொடர்பாடல் மற்றும் மக்களுடன் சேர்ந்து செயலாற்றும் திறமைகளை அதிகம் கொண்டிருக்க வேண்டும்.

அத்துடன் PCOக்கள் பொலிஸ் பாதுகாப்புக் கொள்கைகள், நடைமுறைகளை அனுசரிக்கவும் அத்துடன் அதிகளவு கணனி திறமைகளையும் கொண்டிருக்க வேண்டும். தாம் சிறந்த குணாதிசயங்களையும், நற்பெயரையும் கொண்டவர்களென்பதையும், தீர்ப்புவழங்காமல் இருக்க தமது சொந்த நம்பிக்கைகளைப் புறந்தள்ளி வைக்கக் கூடியவர் என்பதனை காண்பிக்க வேண்டும்.

முதிர்ச்சியடைந்த, மாற்றியமைக்கக்கூடிய, நியாயமான மனம் கொண்ட, மக்கள் முன்னேறக்கூடிய ஒரு சூழலை Victoria Police வழங்குகிறது. Victoria Police இனது ஓர் ஊழியன் என்றவகையில், நேரமாற்றுக்கான பணத் தொகை அத்துடன் சம்பளத்துடனான தாய், தந்தைக்கான மகப்பேறு விடுமுறை உட்பட பெரியளவு நன்மைகளுக்கு உங்களுக்கு வழியுண்டு.

VICTORIA POLICE




# பணிக்கான பொறுப்புக்கள் என்ன?

- Victoria Police இன் காவலில் உள்ள ஆட்களின் பரிபாலனம் தொடர்பான எல்லாவித கடமைகளையும் நிறைவேற்றல்.
- காவலில் உள்ளோரினதும், ஊழியர்கள் மற்றும் அவர்களைப் பார்க்க வருகைதருவோரினதும் உடல் நலம், பாதுகாப்பு மற்றும் மேற்பார்வை என்பவற்றை உறுதிசெய்தல்.
- காவலில் உள்ள மக்களுக்கான போக்குவரத்து, நிலையத்திற்கப்பால் வருகைதரல் அல்லது காணொளி தொடர்புகளை ஒழுங்குபடுத்தல்.
- நாளாந்த கடிதப்போக்குவரத்தைத் தயார்செய்தல், வரவு இடாப்புகள், அறிக்கைகள் ஏனைய நிர்வாக வேலைகளை உருவாக்குவது அடங்கலாக சட்டமூலம், கொள்கைகள் அத்துடன் நடைமுறைகளுக்கிணங்க காவல் நிர்வாக வேலைகளை நிறைவேற்றல்
- கைவிரல் அடையாளம் பதிவுசெய்தல், DNA நிர்வாகம், ஒளிப்படம் பிடித்தல், சாட்சிய சோதனை அத்துடன் வேண்டும்போது நீதிமன்றில் சாட்சியமளித்தலைப் பொறுப்பேற்றல்.

# எந்த இடங்களில் உத்தியோகம் இருக்கிறது?

1. Ballarat
2. Dandenong
3. Heidelberg
4. Geelong
5. Sunshine
6. Broadmeadows
7. Frankston
8. Mildura
9. Ringwood
10. Moorabbin
11. Wodonga
12. Bendigo
13. Swan Hill
14. Mill Park
15. Warrnambool
16. Morwell
17. Shepparton
18. Wangaratta
19. Bairnsdale
20. Horsham
21. Sale
22. Melbourne West (CBD)

மேலும் தகவல்களுக்குத் தயவுசெய்து வருகை தரவும்
**www.policecareer.vic.gov.au/pco**

VICTORIA POLICE



# விண்ணப்பிக்க நான் தகுதி உடையவனா?

Victoria Police இல் ஒரு PCO ஆக வேலைசெய்யும் தகைமையைப் பெற்றுக்கொள்ள, பின்வரும் நுழைவுக்கான வேண்டுதல்களை நீங்கள் பூர்த்திசெய்ய வேண்டும்:

- வயது 18 ஆண்டுகளுக்கு மேல்
- ஆஸ்திரேலிய குடிமகன் அல்லது நிரந்தர வதிவாளர்
- முழு அளவிலான அல்லது தகுதிகாண் நிலையிலுள்ள ஆஸ்திரேலிய சாரதி அனுமதிப்பத்திரம்
- உடல் நிறைச் சுட்டெண் (BMI) 30 அல்லது அதற்கும் கீழ்
- தீர்க்கப்படாத பிடிவிறாந்துகள் (warrants), காசுக்கட்டளைகள், அல்லது வாகன அல்லது தரிப்பிட சட்டமீறல் தொடர்பிலான பணம் செலுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

# விண்ணப்ப நடைமுறை என்ன?

*Victoria Police இல் வேலைக்காகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் ஒரு விண்ணப்பதாரி என்றவகையில், பின்வரும் படிமுறைகளை நீங்கள் கடந்துவர வேண்டும்*

**படிமுறை 1**: **www.policecareer.vic.gov.au/pco** இணையத்தளம் ஊடாக ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பியுங்கள்

**படிமுறை 2**: முதற்கட்ட பின்புல பரிசீலனைக்கு ஆளாதல்

**படிமுறை 3**: மதிப்பிடும் தினத்தன்று அதில் பங்குகொள்ளல்

**படிமுறை 4**: உளவியல் சோதனைக்கு ஆளாதல்

**படிமுறை 5**: உளவியல் ஆய்வுக்கு உட்படல்

**படிமுறை 6**: மருத்துவ மதிப்பீட்டுக்கு ஆளாதல்

**படிமுறை 7**: முழுமையான பின்புல பரிசீலனைக்கு ஆளாதல்

**படிமுறை 8**: உடற்கட்டு சோதனைக்கு உட்படல்

**படிமுறை 9**: குழுவினரின் நேர்காணலுக்கு சமூகமளித்தல்

**படிமுறை 10**: உத்தியோகத்தை பொறுப்பேற்றல்

மேலும் தகவல்களுக்குத் தயவுசெய்து வருகை தரவும்
**www.policecareer.vic.gov.au/pco**

VICTORIA POLICE



# நான் பெற்றுக்கொள்ளும் பயிற்சி என்ன?

Melbourne, Glen Waverly இல் அமைந்துள்ள Police Academy மற்றும் கொடுக்கப்படும் பொலிஸ் நிலையத்தில் இடம்பெறும் எட்டு வார பயிற்சித்திட்டத்தை பூர்த்திசெய்யுமாறு PCO வேண்டப்படுவார்கள். பயிற்சியின்போது பாதுகாப்பு நிர்வாகம் மற்றும் கைதி நலன் பேணுதல் சொல்லிக் கொடுக்கப்படும்.

Victoria Police கல்விநிலையத்தில்  பயிற்சியானது கடுமையாகவும், கட்டுப்பாடானதாகவும் இருக்கும். அத்துடன் அது  உடல், கல்வி மற்றும் உளவியல் ரீதியில் சவாலக இருக்கும்.

**விண்ணப்பிப்பதற்கு முன்னர் வேறு என்ன முக்கிய தகவல்களை நான் கவனத்தில் கொள்ள வேண்டும்?**

- தங்கள் பயிற்சி முடிவடைந்ததும் மூன்றுமாதகாலம் தகுதிகாண் நிலைக்கு ஆளாவர்.
- PCOகள் ஆரோக்கியமான உடல் உறுதியைப் பேணுமாறும் அதற்கு உட்படுமாறும் வேண்டப்படுவார்கள். தொழில்பார்க்கும் காலம் முழுக்க, PCO வினர் ஈராண்டுகளுக்கு ஒருமுறை உடலுறுதி சோதனைக்கு உட்படுமாறு வேண்டப்படுவார்கள்.
- விண்ணப்பதாரிகள் ஒழுங்கான முறையில் போதை மற்றும் குடிவகைக்கான சோதனைக்கு ஆளாவர்.
- நிறுவனத்தின் OHS  வேண்டுதல்களைப் பூர்த்திசெய்யுமாறு பதவியைப் பெறுபவர் வேண்டப்படுவார். உபகரணங்களின் பாவனைமற்றும்ஆபத்தானஇரசாயனங்கள் தொடர்பான உள்ளூர் மட்டத்திலான பயிற்சியை அது உள்ளடக்கலாம்.
- உங்கள் பயிற்சிக்காலத்தில் நீங்கள் தெரிய வேண்டியவை உங்களுக்குப் போதிக்கப்படுவதால், நீங்கள் எந்தவொரு சட்ட அறிவையும் கொண்டிருக்கத் தேவையில்லை.
- இந்தப் பதவிக்கு பல்கலைக்கழக தராதரங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது; எவ்வாறாயினும், விண்ணப்பிக்கும் நேரத்தில் உங்கள் வயது 18 ஆண்டுகளாகவோ அல்லது அதற்கு மேலாகவோ இருக்க வேண்டும்.
- பகல், மாலை, இரவு நேர மாற்று முறையான வேலை களுக்காக (shift) PCO க்கள் அட்டவணைப்படுத்தப்படுவார்கள். வெவ்வேறு நேர வேலைகள் (shift) 8.06 மணித்தியாலங்களுக்கு நீடிக்கும் என்பதுடன் ஓர் அரைமணி நேர உணவு இடைவேளையையும் உள்ளடக்கும்.  இடங்களைப் பொறுத்து ஆரம்பிக்கும் மற்றும் முடிக்கும் நேரங்கள் வித்தியாசப்படக்கூடும்.
- PCO மார்கள் ஒரு குண்டாந்தடி, கைவிலங்கு அத்துடன் OC தெளிகருவியைக் கொண்டுதிரிவார்கள்.

# அதிக தகவல்கள்?

மேலதிக தகவல்களுக்காக வருகை தாருங்கள்: **http://www.policecareer.vic.gov.au/pco**
அல்லது உங்கள் விசாரணைக்கு மின்அஞ்சல் செய்யவேண்டியது:
**pcoemployment@police.vic.gov.au**

VICTORIA POLICE